பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 06 2024 Monday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி- <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் தமது அரசு தொடர்ந்து செயல்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- வர்த்தகர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கான கோதுமை கையிருப்பு உச்சவரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.
- சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் நிகழ்ந்த கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக காங்கிரஸ் கருத்து தெரிவிக்காதது ஏன் என்று பிஜேபி கேள்வி எழுப்பியுள்ளது.
- ஜிம்பாப்வே-க்கு எதிரான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் தமது அரசு செயல்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மக்களவை கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு முன்பு செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - மோடி 100 செகண்ட்ஸ்)

இதனைத் தொடர்ந்து 18-வது மக்களவையில் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கியது.

புதிய உறுப்பினர்களுக்கு இடைக்கால பேரவைத் தலைவர் திரு. Bhartruhari Mahtab பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மக்களவைத் தலைவருக்கான தேர்தல் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் வரும் 27ஆம் தேதி உரையாற்றுகிறார்.

>>>><<<<

மேற்குவங்க ரயில் விபத்து மற்றும் நீட் பிரச்சினை குறித்து மத்திய அரசு மௌனம் காப்பது ஏன் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பிரச்சினைகளை நாடாளுமன்ற கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் என்றார்.

>>>><<<<

தமிழகத்தில் நிகழ்ந்த கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக காங்கிரஸ் கருத்து தெரிவிக்காதது ஏன் என்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெபி. நட்டா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே-க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் இப்பிரச்சினையில் காங்கிரஸின் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்பிரச்சினை தொடர்பான விசாரணையை சிபிஐ-க்கு மாற்ற தமிழகத்தை ஆளும் திமுக அரசிற்கு காங்கிரஸ் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் அக்கடித்ததில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி சம்பவம் காரணமாக, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் திரு. முத்துசாமியை, முதலமைச்சர் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் திரு. ஜெ. பி. நட்டா அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

>>>><<<<

பீகார் மாநிலத்தில் புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக 21 ஆயிரம் காவல்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை உயரதிகாரி திரு. Bhrigu Shrinivasan கூறியுள்ளார்.

பாட்னாவில் பத்திரிகை தகவல் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த இது தொடர்பான பயிலரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

புதிய குற்றவியல் சட்டங்களையும், அடுத்த மாதம் 1 ஆம் தேதி முதல் செயல்படுத்துவதற்கு பீகார் காவல்துறை தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சட்டங்கள் தொடர்பாக நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

காவல்துறையின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு இந்த மூன்று சட்டங்களும் உதவிடும் என்று திரு. Bhrigu Shrinivasan தெரிவித்தார்.

>>>><<<<

சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவை நடப்பு கூட்டத்தொடரில் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் இதனை தெரிவித்த அவர். இப்பிரச்சினையை எழுப்பிய பாமகவின் திரு. கோ.க. மணி, இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 22 பேரை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதை திரு. அண்ணாமலை அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>><<<<

கோதுமை கையிருப்புக்கான உச்சவரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்த உணவுத்துறை செயலர் திரு. சஞ்சீவ் சோப்ரா, கோதுமை வர்த்தகத்தில் ஈடுபடும் மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளுக்கு இந்த உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வர்த்தகர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கான கோதுமை கையிருப்பு உச்சவரம்பு 3 ஆயிரம் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சில்லறை வியாபாரிகளை பொறுத்தவரை இது 10 டன்னாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலும், பதுக்கலை தடுக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு. சஞ்சீவ் சோப்ரா கூறினார்.

>>>><<<<

புகையிலை பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து கல்வி நிலையங்களில் தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்காக புகையிலை பயன்பாடற்ற கல்வி நிலையங்களுக்கான நெறிமுறைகளை சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக விழிப்புணர்வு இயக்கங்களை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மாநில அரசுகள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

>>>><<<<

தென்கொரியாவில் லித்தியம் பேட்டரி உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

Hwascong பகுதியில் உள்ள தொழிற்சாலையில் இந்த விபத்து நேரிட்டதாகவும், 23 பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

தீ விபத்து நேரிட்டபோது 67 பேர் பணியில் இருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

உற்பத்தி செய்யப்பட்ட பேட்டரியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறே இந்த தீ விபத்திற்கு காரணம் என்று முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>><<<<

தமிழகம், கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களில் அடுத்த 5 தினங்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி திரு. Jenamani குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் கோவாவிற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதாகவும் திரு. Jenamani தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகம், கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களில் அடுத்த 5 தினங்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி திரு. Jenamani குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் கோவாவிற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதாகவும் திரு. Jenamani தெரிவித்தார்.

>>>><<<<

ஜிம்பாப்வே-க்கு எதிரான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது

Shubman Gill தலைமையிலான இந்த அணியில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஜிம்பாப்வேயில் நடைபெறவுள்ள 5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதலாவது ஆட்டம் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ளது.

>>>><<<<

உலக கோப்பை பாரா வலு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Ashok வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜார்ஜியாவின் Tbilisi-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>><<<<

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் Dipanshi, 53 கிலோ எடைப்பிரிவில் Muskan, 61 கிலோ எடைப்பிரிவில் Rajnita, 69 கிலோ எடைப்பிரிவில் Mansi Lather ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் Samarth Gajanan Mhakave-ம் மகளிர் 40 கிலோ எடைப்பிரிவில் Rajbala-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இதர ஆடவர் பிரிவுகளில் ஆகாஷ், சச்சின் குமார், Bikash Kacchap, Ronak மற்றும் Tushar வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>><<<<

பிரான்ஸில் நடைபெற்ற பாரா வாள் வீச்சுப் போட்டியில் இந்தியாவின் Rakhal Kumar Sethy வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

St. Lucia-வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>>END<<<<